**வருகின்ற 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் தேதி திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

**1.** பவானி நகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு மானியம் 2019-2020 (14th CFC) நிதியில் இரண்டு தவணை தொகை மொத்தம் (100%) ரூ.232.32 இலட்சமாகும். இதில் முதல் தவணை தொகை 50% ரூ.116.16 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு மூன்று சாலைப்பணிகளுக்கு ரூ.120.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட சாலைப்பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No. | Name of the work | Road Length in M | Estimate Amount Rs. in lakhs |
|---|---|---|---|---|
| 1 | 10 | **Package: I** Providing BT Road and Construction of storm water Drain at Amman Layout in ward No.10 | 381 | 50.00 |
| 2 | 4,10, 1 & 8 | **Package: II** Providing BT Roads and Construction of storm water drain at Mettur main road ( Court south side road), Head works, Palanipuram 1st street, Sokkaramman Nagar and Anthiyur road in ward No.4 ,10,1 & 8 | 615 | 48.00 |
| 3 | 3&15 | **Package: III** Providing BT roads at Anna Nagar Extension to Mettur Main road (Mayura complex) and Restoration of BT roads at Manthozhilalar 3rd street and Anna Nager in Ward No.3 &15 | 373 | 22.00 |
| | | **Total** | **1369** | **120.00** |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட வரிசை எண். 1 மற்றும் 2 பணிகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை அனுப்பி நிர்வாக அனுமதி பெறலாம்.
3. வரிசை எண்.3 பணிக்கு இந்நகர்மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
4. மானிய நிதி ரூ.116.16 இலட்சம் போக மீதி தொகை ரூ.3.84 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.007/2020/இ1)

**வருகின்ற 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. பவானி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் "பி" பிரிவு அங்கீகாரம் வரும் 16.04.2020 -ல் ஓராண்டு காலம் முடிவடைகிறது.

எனவே மேற்படி பேருந்து நிலையத்தின் அங்கீகாரத்தினை மேலும் ஓராண்டு காலத்திற்கு 17.4.2020 முதல் 16.04.2021 வரை புதுப்பிக்க வட்டாரப்போக்குவரத்து அலுவலர், ஈரோடு அவர்களின் அங்கீகாரம் பெறுவதற்காக மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 87/2020/அ2)

3. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019-20 பவானி நகராட்சி வார்டு எண். 9 பழனிபுரத்தில் நியாயவிலைக்கடைகட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடித ந.க.எண். 3418/19/ அ3, நாள்: 07.01.2020-ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் பேரில் 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன், பவானி | 0.03% மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | திரு. பி.ஏ.செல்லப்பன், பவானி | 1.22% மதிப்பீட்டு விகித்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.03% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1683/2019/இ1 )

4. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019-20 பவானி நகராட்சி வார்டு எண். 2 காமராஜ் நகரில் நியாயவிலைக்கடை கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண். 3418/2019/அ3 நாள்: 07.01.2020 -ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் பேரில் 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி, பவானி | 0.03% மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | M/S ஆர்.என்.& கோ , ஈரோடு | 1.42% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.03% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1683/2019/இ1 )

5. சட்டமன்றஉறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 அனுசுயா மருத்துவமனை அருகில் அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கை ந.க.எண். 1529/2019/அ3, நாள்: 07.01.2020 நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் பேரில் 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி, ஒப்பந்ததாரா ், பவானி | 0.04% மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | M/S. ஆர்.என்.& கோ ஒப்பந்ததாரர் , ஈரோடு | 1.27%மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.04% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1622/2019/இ1 )

6. சாலை பாதுகாப்பு நிதி 2019-20 -ன் கீழ் பவானி நகராட்சி புதிய பேருந்து நிலைய சாலை சந்திப்பில் தானியங்கி போக்குவரத்து சமிக்ஞை நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 252 நாள்: 31.12.2020 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.சாய் அட்லடைஸ்சர்ஸ், மேட்டூர். | 0.12% மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | திருவாளர்.வர்மாசிக்னல்ஸ் மேட்டூர். | 1.41% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.12% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் சாய் அட்லடைஸ்சர்ஸ் மேட்டூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1549/2019/இ1 )

7. பவானி நகராட்சியில் தற்போது சேமித்து இருப்பு வைக்கப்பட்டுள்ள மற்றும் தினமும் சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகளை M/s Ultratech Cements Ariyalur, M/s Dalmia Cements Dalmiapuram, M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்துார், M/s இந்தியா சிமெண்ட்ஸ், சங்ககிரி போன்ற சிமெண்ட் ஆலைகளுக்கும் மற்றும் M/s Mak India Ltd, Erode அவர்களுக்கும் ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal of Combustible Wastes) செய்யும் பணிக்கு 21.01.2020 ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | வாகனங்களை விநியோகிக்க வேண்டியதன் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1. | M/S ARO Transport,<br>Sipcot,<br>IOB Bank Opp,<br>Perundurai,<br>Kovai Main road,<br>Perundurai - 638 052. | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை சரக்கு லாரியில் ஏற்றிட JCB வாகனம் ஒரு மணி நேரத்திற்கு விநியோகம் செய்ய | ரூ.970/-<br>Per hour |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Dalmia Cements, Dalmiapuram-ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.15450/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்துாருக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle) லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle) லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.10530/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s India Cements, Sankari-க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.5540/- Per Lorry/Per trip |
| | -do- | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை ஆ/s Mak India Ltd, Erode -ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.5475/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Ultratech Cements Ariyalur -க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.15450/- Per Lorry/Per trip |

| | | | |
|---|---|---|---|
| 2 | S. பாலசுப்ரமணியன்,<br>43, பழனிபுரம் 3வது வீதி,<br>பவானி. | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை சரக்கு லாரியில் ஏற்றிட JCB வாகனம் ஒரு மணி நேரத்திற்கு விநியோகம் செய்ய | ரூ.1000/- Per hour |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Dalmia Cements, Dalmiapuram-ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.16100/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s ACC Cements மதுக்கரை, கோயம்புத்துாருக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒருமுறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle)லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.10760/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை ஆ/ள ஐனெயை ஊநஅநவெளஇ ளுயமெயசை-க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி | ரூ.5750/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Mak India Ltd, Erode -ற்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.5970/- Per Lorry/Per trip |
| | | பிளாஸ்டிக் கழிவு மூட்டைகளை M/s Ultratech Cements Ariyalur -க்கு சரக்கு ஏற்றிச் செல்லும் லாரியில் ஒரு முறை ஏற்றி அனுப்பி இறக்கும் பணிக்கு சரக்கு லாரி விநியோகம் செய்ய (Goods Carriage Vehicle).லாரி ஒன்றுக்கு ஒருமுறைக்கு | ரூ.16200/- Per Lorry/Per trip |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.1628/2019/எச்1)

8. பவானி நகராட்சி வார்டு எண்.14 மேட்டூர் ரோடு அந்தியூர் பிரிவு நகராட்சி வணிக வளாகம் பின்புறம் உள்ள காலி இடத்தில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு சக்கர வாகனம் நிறுத்தும் செட் கட்டும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.83, நாள்: 30.04.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 18.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ் அவர்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 119 நாள்: 28.05.2018 -ல் பணியை அங்கீகரிக்கப்பட்டு 29.05.2018-ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணியை துவங்கி செய்து முடிக்கப்பட்டுள்ள பணிக்கு முதலாம் மற்றும் பகுதி பட்டியல் தொகை 18.09.2018 -ல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணியினை

தொடராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளதால் முதலாம் அறிவிப்பு கடிதம் மூலமாக பணியினை தொடங்கி 7 தினங்களுக்குள் முடித்து கொடுக்க 31.7.2019-ல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அறிவிப்பு கடிதம் வழங்கியும் பணி தொடராமல் உள்ளதினால் இரண்டாம் அறிவிப்பு கடிதம் மூலமாக பணியினை உடன் துவங்கி 3 தினங்களுக்குள் முடித்து கொடுக்க 09.09.2019-ல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. இரண்டு அறிவிப்புகள் வழங்கியும் ஒப்பந்ததாரரிடமிருந்து எவ்வித பதிலும் இல்லாத காரணத்தினால் இறுதி அறிவிப்பு கடிதம் மூலமாக 3 தினங்களுக்குள் பணியினை துவங்கி போர்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டும் எனவும் தவறினால் எவ்வித முன்னறிவிப்பின்றி தங்களது ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் இப்பணிக்கு செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள with held தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்யப்படும் என அறிவுறுத்தி இறுதி அறிவிப்பு கடிதம் 23.12.2019 -ல் வழங்கப்பட்டது.

இப்பணியானது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளதால் பணியை விரைவாக முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

எனவே ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவை இரத்து செய்யவும் மீதமுள்ள பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோரி செய்து முடிக்கவும் இதனால் ஏற்படும் செலவினத்தை ஈடு செய்ய அவர் இப்பணிக்கு செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை மற்றும் பில்லில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகைகளை பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.455/2018/இ1)

9. இந்நகராட்சியில் 14th CFC 2019-20 திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் .1 வார்டு எண்.10, அம்மன் லே அவுட்டில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 112/2020/பி1 நாள்: 06.01.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line -ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உறை 30.01.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் | 50.00 | 5.00% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | திரு.A.D. இளங்கோ குன்னத்தூர் | 50.00 | 8.06% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 5.00 %

சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 30.01.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 28.01.2020 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 5.00% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து 4.97% சதவிகிதத்திற்கு செய்து தர 30.01.2020 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள். ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.97% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.97% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் எற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவித்தை 4.97 % சதவீதம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.007 /2020/இ1)

10. இந்நகராட்சியில் 14th CFC 2019-20 திட்டத்தின்கீழ் ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் .2 வார்டு எண்.4,10,1 & 8 மேட்டூர் மெயின் ரோடு (கோர்ட் தென்புற சாலை), தலைமை நீரேற்று நிலையம், பழனிபுரம் முதல் வீதி, சொக்காரம்மன் நகர் , மற்றும் அந்தியூர் ரோடு ஆகிய பகுதிகளில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 112/2020/பி1 நாள்: 06.01.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line -ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 30.01.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் | 48.00 | 5.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | திரு.A.D. இளங்கோ குன்னத்தூர் | 48.00 | 8.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 5.04 %

சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.ஆர்.செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 30.01.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 28.01.2020 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 5.04% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து 4.99% சதவிகிதத்திற்கு செய்து தர 30.01.2020 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள். ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.99% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவித்தை 4.99 % சதவீதம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.007 /2020/இ1)

11. இந்நகராட்சியில் 14th CFC 2019-20 திட்டத்தின்கீழ் ரூ 22.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் : 3 வார்டு எண்.3 & 15 அண்ணா நகர் விரிவாக்கம் முதல் மேட்டூர் மெயின் ரோடு வரை ( மயூரா காம்ளக்ஸ்),புதிய தார்சாலை அமைத்தல் மற்றும் மண்தொழிலாளர் 3வது வீதி, அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.01 நாள்: 06.01.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line -ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 30.01.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் | 22.00 | 5.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | திரு.A.D. இளங்கோ குன்னத்தூர் | 22.00 | 8.08% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 5.01 % சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 30.01.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 28.01.2020 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை

விகிதத்தில் 5.01% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து 4.95% சதவிகிதத்திற்கு செய்து தர 30.01.2020 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள். ஒப்பந்ததாரர் திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.95% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திரு. ஆர். செம்பாகவுண்டர், அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் எற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவித்தை 4.95 % சதவீதம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.007 /2020/இ1)

12. பொறியியல் பிரிவு குடிநீர் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்கள் ஏற்பாடு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்குநகர்மன்ற தீர்மான எண். 253, நாள்: 31.12.2019-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 30.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | எம்.அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 0.23% மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | M/s. R.N.& Co ஒப்பந்ததாரர் | 5.63% மதிப்பீட்டு விகித்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.23% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் , ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1734/2019/இ1 )

13 . பவானி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தேவையான பிளக்ஸ் போர்டுகளை விநியோகம் செய்ய ரூ.27/- என்னும் விலைவிகிதத்தில் ( சதுர அடி ஒன்றுக்கு) சம்மதித்து ஒப்பந்தப்புள்ளி வழங்கி பணி மேற்கொண்டு வருகிறார். மேற்படி ஒப்பந்ததாரர் ரூ.27/- என்னும் பழைய விலை விகிதத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்து பிளக்ஸ் போர்டுகள் விநியோகம் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கி உள்ளார்.

எனவே எதிர்வரும் 31.03.2020 வரை இந்நகராட்சிக்கு தேவைப்படும் பிளக்ஸ் போர்டுகள் M/s. ஏ.ரவிக்குமார் மேட்டூர் மெயின்ரோடு, பவானி அவர்களிடம் ரூ.27/- என்னும் விலைவிகிதத்தில் பெற்று கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.45,000/-க்குள் செலவிட்டு கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.311/2017/எச்1)

14. இந்நகராட்சிக்கு SBM திட்டத்தின் கீழ் ODF(+) சான்று பெறுவதற்கு நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மக்கள் அறியும் வகையிலான வாசகங்கள் அடங்கிய flex போர்டுகள் M/s. ஏ.ரவிக்குமார் மேட்டூர் மெயின்ரோடு, பவானி அவர்களிடம் பின்வரும் விபரப்படி பெறப்பட்டமைக்கு பட்டியல் தொகை வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வழங்கப்பட்ட விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டு விபரம் | அளவு மற்றும் மொத்த சதுர அடி | சதுர அடி ஒன்றுக்கு | மொத்தம் வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | கழிவறை பயன்பாடு அவசியம் குறித்த விழிப்புணர்வு “ரெய்னா” பிளக்ஸ் போர்டு - 30 Nos | “6x4” சைசிஸ் =720 சதுர அடி | ரூ.27/- | ரூ.19440/- |
| 2 | “கழிப்பிடம் செல்லும் வழி” குறித்த பிளக்ஸ் போர்டு 33 Nos | “ 2x2” சைசிஸ் =132 சதுர அடி | ரூ.27/ | ரூ.3564/- |
| 3 | ஆண்கள் கழிவறை பிளக்ஸ் போர்டு 33 Nos | “ 3x2” சைசிஸ் =198 சதுர அடி | ரூ.27/ | ரூ.5346/- |
| 4 | பெண்கள் கழிவறை பிளக்ஸ் போர்டு 33 Nos | “ 3x2” சைசிஸ் =198 சதுர அடி | ரூ.27/ | ரூ.5346/- |
| | | | மொத்தம் | ரூ.33696/- |

மேற்கண்ட விபரப்படி பிளக்ஸ் போர்டுகள் விநியோகம் செய்த M/s. ஏ.ரவிக்குமார் மேட்டூர் மெயின்ரோடு, பவானி அவர்களுக்கு தொகையாக வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.311/2017/எச்1)

15. பவானி நகராட்சி 14-வது மத்திய நிதிக்குழு மானியம் 2019-2020-ன் கீழ் மூன்று பணிகள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழ் ஒன்றில் விளம்பரம் செய்தமைக்கு மதுரை மணி தினசரி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து விளம்பரக்கட்டணமாக ரூ.32,640/- வரப்பட்டுள்ளது. பட்டியல் எண்.526 நாள்: 08.01.2020 மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 007/2020இ1)

16. இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்கள். TN36AL,4167,TN36AL8317,TN36AL8307,TN36AR3430 ஆகிய நான்கு இலகு ரக வாகனங்களுக்கும் (LCV’s) ஆயில் சர்வீஸ் மற்றும் சிறு பழுதுகளை சரிசெய்யும் பணி போன்றவற்றை TATA Motors-ன் பணிமனையான M/s எக்ஸல் ஆட்டோ சர்வீஸ், 578A நசியனூர் ரோடு ஈரோடு அவர்களின் பணிமனையில் ஆயில் சர்விஸ் மற்றும் பழுது செப்பனிடும் பணியினை மேற்கொள்ளவும், இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.47500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.0021/2019/எச்1)

17. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட சாலைகளில் திருவாளர் Jio Digital Fibre Private Ltd., Chennai. அவர்களுக்கு கண்ணாடி இழை நார் கேபிள் (OFC) பதிக்க அனுமதி அளிக்கப்பட்டு கேபிள் பதிக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. கேபிள் பதிக்க தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை வெட்டி பதிக்கப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட சாலைகளான வர்ணபுரம் 4வது வீதி, குருநாதன் வீதி, சொக்கராயன்காடு, பெரியார் நகர், திருவள்ளுவர் நகர், வெள்ளை விநாயகர் கோவில் தெரு, தேவபுரம் மற்றும் பிற சாலைகளில் பிற உபயோகத்தினால் பழுதுபட்டுள்ள சாலைகளை மறுசீரமைப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0129/2020/சி1)